# நாகூம்

நினிவேயின் மீதான தண்டனை

# இப்புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- நாகூம் என்ற பெயருக்கு "ஆறுதல்" அல்லது "தேறுதல்" என்று பொருள்.
- இவன் கலிலேயாவிலுள்ள எல்கோசா என்னும் கிராமத்தை சேர்ந்தவன்.
- இது யோவான் 7:52ல் யூத தலைவர்கள் சொன்ன "கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை" என்ற அறிக்கை தவறானது என்று நிரூபிக்கிறது.
- மேலும் நாகூம் (நாகூம் 1:1), யோனா (2 இரா14:25), எலியா 1 இரா 17:1)ஆகியோர் கலிலேயாவை சேர்ந்தவர்களே.
    - அதிகாரங்கள் 3
    - வசனங்கள் 43

# நாகூமின் பின்னணி

- நாகூமின் செய்தியானது யூதாவுக்கான ஆறுதலும், தேறுதலும் அளிக்கக் கூடிய செய்தி.
- இந்த செய்தி தேவன் துன்மார்க்கரை நியாயம் விசாரிப்பார் என்பற்கான நினைவூட்டுதல்.
- நாகூம் ஒபதியாவைப்போல புறஜாதி தேசத்திற்கு தேவனின் தீர்க்கதரிசன த்தை சொன்னவன்.
- ஒபதியா ஏதோமின் மேல் வரவிருக்கும் தண்டனையை கூறியவன். நாகூமோ நினிவேயின் மேல் வரவிருக்கும் தண்டனையை கூறியவன்.
- இருவருமே யூதாவிலிருந்தே செய்தியை கொடுத்தார்கள்.
- நினிவே அழிக்கப்படும் என்பதே நாகூமின் செய்தி
- மூன்று அதிகாரங்களில் உள்ள கிட்டதட்ட ஒவ்வொரு வசனமும் கிமு612ல் நடந்த அசீரியாவின் பிரதான நகரின் அழிவை சொல்லுகிறது.
- நூறு ஆண்டுகளுக்கு முன்பதாக நினிவேயின் ஜனத்தின் மேல் வரவிருக்கும் கர்த்தரின் தண்டனையை குறித்து யோனா சொன்னபோது அவர்களது அரசனும், 600,000 ஜனங்களும் இஸ்ரவேலின் தேவனிடத்திற்கு மனந்திரும் பினார்கள்.
- இவ்வாறு மனந்திரும்பியவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இஸ்ரவேலின் தேவனைக் குறித்து போதிக்க தவறினார்கள்.
- ஜனங்கள் தங்கள் பழைய துன்மார்க்கத்திற்கும், பொல்லாத வழிகளுக்கும் திரும்பினார்கள்.
- கிமு 722ல் அவர்கள் இஸ்ரவேலாகிய தெற்கு இராஜ்யத்தை அழித்து, எருசலேமை கிமு 701ல் கைப்பற்ற முனைந்தார்கள்.

# நினிவேயை குறித்த தீர்க்கதரிசனம்

- பூமியின் நகரங்களில் நினிவே அதிகவல்லமையுடையதாய் மாறியது.
- நகரத்தின் மதில்கள் 100 அடி உயரமுள்ளவைகளாயும், பக்கம்பக்கமாக மூன்று இரதங்கள் செல்லத்தக்க அகலமுள்ளதாகவும், அதைச் சுற்றிலும் 150 அடி நீளமும் , 60 அடி ஆழமும் உள்ள அகழியும் இருந்தது.
- படைகளால் முற்றிகை போடப்பட்டால 20 வருடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடியது என்று நம்பப்பட்டது.

"புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம்" (1:8) உண்டாகும் என்று நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தான்.

- டைகிரீஸ் நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அதன் கரைகளை உடைத்துக் கொண்டு வந்து நினிவேயின் மதில்களின் ஒரு பகுதியை சேதப்படுத்தியது.
- வெள்ளத்தினால் உண்டான சேதத்தை பயன்படுத்திக்கொண்டு கிமு 622ல் பாபிலோனியப்படை நினிவேயினுள் புகுந்து நகரத்தை கொள்ளையிட்டு அதை தீக்கிரையாக்கியது.

"இருக்கும் இடம் இன்னதென்று தெரியாது" போகும் என்று நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தான். (3:17)

- கிமு 612ல் அந்நகரம் அழிக்கப்பட்டபின்பு சுமார் 2254 ஆண்டுகள் வரை அது இருந்த இடம் அறியப்படவில்லை. கிபி 1812ம் ஆண்டில்தான் அது கண்டுபிடிக்கப்பட்டது.
- கிமு 612ல் அந்நகரம் அழிக்கப்பட்டபின்பு அது மீண்டும் கட்டப்படவில்லை.

# நாகூம் புத்தகத்தின் முக்கிய பகுதிகள்

**I.** கருப்பொருளும் ஆக்கியோனும் 1:1

**II.** தேவனின் மகத்துவம் 1:2-14

A. தேவனின் சுபாவங்கள் 1:2-8

B. தேவனின் கோபம் 1:9-14

**III.** தேவனின் நியாயத்தீர்ப்பு 1:15-3:19

A. தண்டனை அறிவிப்பு 1:15

B. தண்டனை கணிப்பு 2:1-2

C. தண்டனை விபரிப்பு 2:3-10

D. தண்டனை நிரூபிப்பு 2:11-3:7

E. தண்டனை மன்னெச்சரிப்பு 3:8-10

F. தண்டனை தவிர்க்கமுடியாதது 3:11-19